ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

अकाण्डब्रह्माण्डक्षयचकितदेवासुरकृपा-
विधेयस्यासीद्यस्त्रिणयनविषं संहृतवतः ।
स कल्माषः कण्ठेन तव कुरुते न श्रियमहो
विकारोऽपि श्लाघ्यो भुवनभयभङ्गव्यसनिनः ॥ महिम्ने ।

தேவர்களும் அசுரர்களும் அமுதம் உண்ணவேண்டி திருப்பாற்கடலைக்கடையும்போது அதிலிருந்தும் எதிர்பாராமல் திடீரென்று உண்டான விஷத்தால் அது உண்டான ஸமயத்திலேயே சகல பிர்ம்மாண்டங்களுக்கும் நாசமேற்படுமோவென்று மிகவும் பயந்தவர்களான தேவதைகளுக்கும், அசுரர்களுக்கும், அபயப்பிரதானம்கொடுத்து கருணை செய்யவேண்டி யாதொரு காளகூட விஷமானது உம்மால் புஜிக்கப்பட்டதோ, हे त्रिणयन, மூன்றுநேத்திரங்களையுடைய ஹே சந்திரசேகர ? அந்த விஷத்தைப் புசித்ததினால் உம்முடைய கழுத்திலுண்டான களங்கமானது உம்முடைய கண்டத்திற்கு சோபையைக் கொடுக்கவில்லை என்பதில்லை. அதிகமான காந்தியை யுண்டுபண்ணுகிறது. என்றுபொருள் இது மிகவும் ஆச்சரியம் ? உலகத்திற்கு ஒரு பெரிய ஆபத்து நேருங்காலத்தில் பயத்துடன் அதைப்போக்கவேண்டிச் செய்யப்படும் கார்யத்தால் ஏற்படும் தோஷங்கூட குணமாகஆகிப் போற்றும்படி யாகின்றது.

பொதுவாக ஜனங்களுக்கு ஏதாகிலும் எதிர்பாராத கஷ்டம் நேர்ந்தால் அதை சக்தியுள்ளவர்கள் அவசியம் விலக்கவேண்டுமென்றும் அதினால் இவர்களுக்கு ஏதாகிலும் களங்கம் ஏற்பட்டாலும் அது அலங்காரமாக ஆகுமேயன்றி தோஷமாக ஆகாதென்றும் அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

# பண்டிதர்களுக்கோர் விக்ஞாபனம்.

இக்காலத்தில் கலியின் கொடுமையால் அனேகமாய்ச் சதாசாரங்கள் ஒழிந்தன. துர்மதங்களும் துராசாரங்களும் மலிந்தன. நமது பொருள்களும் ராஜாங்கத்திலுள்ள பலவரிகளால் குறைவுற்றன. நமது சுதேச பண்டிதர்களும் நீங்காவறுமையிலுற்றன. ஐய! எவ்விதத்திலாவது பொருள் தேடுவோம். வயிற்றை நிரப்புவோம். குடும்பத்தை இரக்ஷிப்போம். கஷ்டத்துடன் காலங்கழிப்போம். ஆயினும் எமக்கு நல்வழி ஒன்று மறுமையிலுண்டு என்று எண்ணிய எண்ணமும் ஒழிய வழிநேர்ந்ததே; என்செய்வோம், யாதுபற்றியெனின், மூதறிஞர் முது மொழிகளை முற்றிலும் கசடறக்கற்ற பண்டிதமணிகள் நமக்கேதுமுபகரிப்பதில்லையே நம்மவர்க்கு எக்காலமும் குன்றாவலியும் அழியாப்பொருளும் கல்வியே. அதைக்கொண்டே நமது முன்னோர் இத்தேசத்திலிருந்து துர்மதங்களையும் துராசாரங்களையும் சிறிதும் மிகுதியின்றி ஓட்டினார்கள். ஏதேனும் புதியஒர்ஆசாரம் வேண்டுமென்று முயன்றாரில்லை.

என்னையெனில், ஆரியர் அநாதியிற்கொண்ட எந்தவாசாரமும் மதத்துட் சம்பந்தம் பெற்றதும் பிரத்தியக்ஷத்திற் சோதிப்பவனுக்கு ஒரு பயனைத் தருவதுமாக அமைந்திருக்கின்றது. ஆதலின் நமது மதம், வருணம், ஆசாரம், இவற்றின் சம்பந்தத்தையறிந்த பண்டிதர்களே வெளிவராராயின் நமக்கதிலும் வேறான குறைவுண்டோ? அறிஞர்காள்! சிறிது சேவி கொடுங்கள்! முன் மாக்

தாதா முதல் நந்தனீருகவுள்ளவரசர் இப்பூமண்டலத்தை யாண்டு
வந்த காலத்தில் அந்தணர்க்குள் அறிஞர்க்கு அதிக கௌரவமும்,
அவரிடம் அன்பும் பெருகிவந்தன. அவர்சொல்வது தருமமாய்
நடந்தது. அவருக்குக் கல்வியொழுக்கங்களும் நன்மையடைந்தி
ருந்தன. இக்காலத்தோ வேதங்களையாதல் சாஸ்திரங்களையாதல்
எவனும் முற்றிலும் கற்பதில்லை. நல்வழிமாறாது நடப்பதில்லை.
நாத்திகம் புகாதிருப்பதில்லை. ஜீவகாருண்ணியம் பெறுவதில்லை.
உலகநிலையறிவதில்லை. இதற்கெல்லாம் காரணம் நந்தேயத்துப்பண்
டிதர் தம் உதாசினமே. ஐய! இக்காலத்தில் இத்தேசத்துப்பிள்ளை
களாலே இப்புண்ணிய பூமிக்கு நேர்ந்த பெரும் விபத்தைப்பாருங்
கள்! இக்காலத்திலோ ஆங்காங்குக்கூடி ஏதேதோ சில வாசாரங்
களை நமது தேசத்திற் செய்விக்கவேண்டும். என்று உத்தேசித்து
நம் பண்டிதர் அறியாத ஆங்கிலேய பாஷையில் ஏதேதோ பேசி
முடிக்கின்றார்கள். இவர்களுள் பரம்பரையில் வேதங்களையும்,
சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்தவர் மிகக்குறையும் ஏதோ அரை
யாங்கில உச்சரிப்புப்படர்ந்து தன்னிலையொழிந்து பிரகாணமழிந்
துள்ள சில வசனங்களை மொழிந்து தம்மனதிற்பட்ட ஆங்கிலே
யாசாரத்தை நந்தேயத்தில் நாட்ட முயல்கின்றார்கள். இவர்களுக்கு
ஆங்கிலேயர் சொற்களே ஆரணங்கள். அத்தேச சரித்திரங்களே
அறநூல்கள். சமாசாரப்பத்திரிகைகளே சற்புராணங்கள். இந்நூல்
களைக்கற்று அப்புறம் நமது சிஷ்டாசாரத்துக்குப்பதிலாய் மேற்றி
சையார் ஆசாரத்தைக்கொண்டு ஒருமுடிவு செய்ய முயல்கின்றனர்.
அந்தோ! ஒருசமயம் மேற்றிசையார் ஆசாரங்கள் நமது தேசத்
தில் நிலைபெறுமாயின் அப்பொழுது அஃது அருவருக்கத்தக்கதா
யினும் இக்காலத்தில் அஃதுஎவ்வளவும் நமக்கு ஒவ்வாது. பாருங்
கள்! நமது பெண்டீர்கள் வேறு புருஷருடன் தனியறையில் இர
கசியமாய்ப் பேசவும், பரபுருஷன் வீட்டிற்றனேவெகுகாலம்இருக்க
வும், பல அவயவந்தெரிய ஒருடையுடுத்தி வேறு புருஷன் கை
பிடித்தாடவும, நீதிசாலைகளில், மற்றப்புருஷனுடன் தனது ச

பந்தத்தைத் தன்பெண்ஜாதி ஒப்பவும், முன்புருஷன் கேளிவிலாச சக்தியைப் பின் புருஷருடன் சொல்லிக்களிக்கவும், மற்றவர் குடித்த மிருதியைக்குடிக்கவும், வைத்தியர் பரீக்ஷிக்கவேண்டித்தனது சரீரத்தை மற்றவர்க்குக் கொடுக்கவும், சிறுபிள்ளைகளுக்குப்பெண்களே கருப்ப சிகித்ஸை கற்பிக்கவும், தேசம் விட்டுத்தேசம் தனித்துச் சஞ்சரிக்கவும் நேர்ந்தால் எந்தப் புருஷனும் அதை அருவருக்காதிருப்பானு? இவ்விஷயங்களெல்லாம் மேற்றிசையிற்சாதாரணமாய் இருக்கின்றன. பாருங்கள்! மேற்றிசையில் விவாக சம்பந்த விலக்கு வழக்குகள் அடிக்கடி கணக்குக்கடங்காது நேருகின்றன. முன்புருஷனைவிட்டு அவனிருக்க மற்றவனையும் மணப்பார்கள். பலபிள்ளைகள் பெற்றுப் பலபுருஷருடனிருந்து வயது சென்ற மாதை மற்றச்சிறுவன் மணம்புரிவான். சிலர் கன்னிகளாகவே காலங்கழிக்கின்றுர்கள். பல பெண்களுக்குப் புருஷரே இல்லையென்னும் பெண்களுக்குப் பெருங்கஷ்டம் அத்தேசத்திலுள்ளது ஒருபுருஷன் கிடைக்காமற் பெருமாட்டிகளனேகர் மடந்தையாயும் மரிக்கின்றனர். அத்தேசத்திலும் பெண்கள் பருவமடைவதற்கு முன் எவ்விதத்திலும் பெரியோர் ஒரு புருஷனிடம் பெண்ணைக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஒரு புருஷனுக்கப்புறம் மறு புருஷன் கூடாது என்னும் நிர்ப்பந்தமும் இருக்குமேல் அவ்விடத்தில் முற்கூறிய உபத்திரவம் வரப்பெறுது. இவ்விதம் அத்தேசத்திலுள்ள இவ்வழியை இத்தேசத்தில் நாட்டவே நங் குழந்தைகள் வெகு சிரமப்படுகிறுர்கள். இனி இதன் பயன் மேற்றிசையார்க்குச் சந்தோஷமேயன்றி வேறில்லை. இனியும் அறிஞர்மையல் கொள்வரேல் நமது மதாசாரங்கள்ஒழிந்தேபோம். ஆதலின் வெளிவாருங்கள்! உண்மையை வெளியிடுங்கள்! காலமோ குறைவு மற்றவர் முயல்கின்றுர் ராஜாங்கத்தாரும் பிரவேசித்தால் வருங்கேடுஅனந்தம். பின் உங்கள் முயற்சி பயன்படாது. ஆதலின் சபைகளைக் கூட்டுங்கள்! அங்குண்மையை நாட்டுங்கள்! அவற்றை நமது தவப்பயனுய் விளங்கும் ஸ்ரீ ஜகத்குருமஹாஸ்வா

மிகளவர்களிடம் அறிவியுங்கள்! இந்துமதத்திற்குரிய ஸதாசார தர்மங்களை யடையுங்கள்! புதிய சீர்திருத்தத்தை ஒழியுங்கள்! கிழ்மக்களை யாதரியுங்கள்? நம்தேசத்துக்குள்ள ஆபத்தைக்கவனி யுங்கள் உலகநீதியைப் பத்திரிகைகளாலறியுங்கள்? வீண்காலங் கழிக்கவேண்டாம்? உங்கள் முயற்சி கைகூடவேண்டி உண்மைப் பொருளை வழிபடுங்கள்? இக்காலமோ உங்கள் பெண்டீர் பிள்ளை கள்சிடர் இவர்களை உங்களுக்குச் சுதந்திரமாகாதபடி அடிக்கின் றது. அவர்களன்றி உங்களது இல்லறம் நடப்பதெப்படி? ஆதலின் கையிலிறகும நாவில் நன்மொழிகளும் உங்களுக்குப் பெரு குகவென்றி உலகெலாம் பாதுகார்க்கும்கடமைவாய்ந்த உண்மைப் பொருளாய் உமாபதியைத் துதிப்போமாக.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்

---

# தர்மமும் நகரமும்.

இது விஷயத்தை விவரிக்க அவா மிகப்பெற்ற யான் சிற்ற றிவிற்கெட்டியபடி, வரையத் தொடங்கினேன். அறிவாளிகள் அருள்புரிவாருக. धरति लोकं इति धर्मः உலகத்தைக் கார்க்கும் திறனுள்ளது, தர்மம் என்று, பகுதிவிகுதி, வகுப்பால் கிடைக் கின்றது. மறையும். धर्मेण पापमपनुदति தர்மத்தால் பாவத்தை விலக்குகிறான் என்றும் धर्मे सर्वं प्रतिष्ठितं தர்மத்திலேயே எல்லாம் நிலைத்திருக்கின்றதென்றும் तस्माद्धर्मं परमं वदन्ति ஆகையால் அத் தையே யாவற்றிலும் மேன்பாடுற்றதாகச் சான்றோர் மொழிகின்ற னர் என்றும், சாற்றுகின்றது. தர்மமே புருஷர்கள் அடையத் தக்க உறுதிப்பயன்களென்ற நான்கு புருடார்த்தங்களுள் தலைமை பெற்று விளங்குகின்றது. ஆதல்பற்றியே மற்ற மூன்று புருஷார்த் தங்களுக்கும் அறமே ஆதிகாரணமென்றும் அறத்தின் மூலம் வந்தவைகளே சிறப்புப்பெற்றனவாகுமென்றும் தானுகவே புலன்

படுகின்றன. தர்மம், கடவுளது ஸ்வரூபம் என்று குறளாசிரிய ரின் திருவாக்கு உணர்த்துகின்றது. (அறவாழியந்தணன் றுள் சேர்ந்தார்க்கல்லாற் பிறவாழி நீந்தலரிது) தர்மக்கடலானகடவுளை வழிபடாதார்க்கு, அதன்பிறகேயுள்ள பொருட்கடல், இன்பக்கடல் இவைகளைத் தாண்டல் அரிது என்று (சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉ உங்காக்கமெவனோ வுயிர்க்கு) என்ற திருக்குற ளும் அறமே செல்வம் சிறப்பு. இவைகளையளிக்கும் மாந்தர்கட்கு இதினும் வேறு துணையில்லையென்றும் போதிக்கின்றது. உல கில் தர்மம் தலைகாக்கும் என்ற பண்டையகாலத்திய மொழியும் தர்மத்தின் சிறப்பை நிலைநாட்டுகின்றது. தர்மமே மக்கள் யாவற் கும், உகந்த தோழனாகும். அதனால் ஆகாதகாரியம் ஒன்றுமில, ஸ்ரீமத்ராமாயணத்தில் அயோத்தியாகாண்டத்தில் சிற்றன்னையால் கானக வாசத்திற்கு ஏவப்பெற்ற ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி தன் சிறத்தால் ஆக்ஞையைத் தாங்கி தன் தாயின் வீட்டிற்குவந்து ஸமாசாரத்தைத்தெரிவித்துத் தாயின் வருத்தத்தையடக்கமுயன்ற ராகவனை நோக்கி, கடுஞ்சினத்தோடு லக்ஷ்மணர் கூறிய மொழிக ளுக்கு ராகவன் விடையளிக்குங்கால்

धर्मार्थकामाः खलु तात लोके समीक्षिता धर्मफलोदयेषु ।
ते तत्र सर्वे स्युरसंशयं मे भार्येव वश्याभिमता सुपुत्रा ॥

அறப்பயன்களான சுகங்களுக்குச் சாதனங்களாம் அறம் பொரு ளின்பங்களும் அறமொன்றிருந்தாலொழிய நிலையா எங்ஙனம் ஒரு மனைவி கணவனுக்கு ஒற்றிருந்து அறத்தையும், மையல் தந்து இன்பத்தையும் புதல்வனைப் பெற்றுப் பொருளையும் தருவா ளோ அங்ஙனமே தர்மமே மற்ற மூன்றுகளுக்குக் காரணமென் பதில் கிஞ்சிற்றும் ஸம்சயமில்லை என்றும் धर्मो यतस्स्यात्तदु प्रक्रमेत எதில் தர்மம் உண்டாகுமோ அதைத்தொடங்கவேணும் என்றும் திருவாய்மலர்ந்திருக்கின்றார். ஆதலால் தர்மமே தாங்கத்தக்கது. அதுவே நம்மைத் தாங்க வன்மைபெற்றது என்று ஒவ்வொரு

மனிதனுக்கும் தர்மத்தையாதரித்தல் இன்றியமையாததாகும். அவ்விதமாதிரிப்பின் அதனுலாயபயன்களை தார்மிகன்பெற்றுய்வான. பிறறைப்புமுய்விப்பான் என்றதே பெரியாரின்உறுதிமொழியர்கும்,

இங்ஙனம் தர்மத்துள் பெருஞ்சிறப்புப் பொதிந்து கிடப்பதால் இவ்வறிய செல்வத்தை இழக்க யாரே முயலுவார். ஆஞ்சனேயர், ஸ்ரீ ராமச்சந்திர பகவானிடம் உத்திரவு பெற்று, ஆழி தாண்டி தென்னிலங்கையும் புகுந்து, பிராட்டியைத் தேடிக் கொண்டு மனமழிந்து கணையாழிஸய யீந்து தேவியைக்களிப்புறச் செய்து தன் வலிமையைப் புகட்டும் வழியைச் சார்ந்து அதன் மூலம் லங்கேசுவரனது எதிரில் ஏகி, எம்பிரானை இன்னுரென்று தெரிவிக்கவேண்டிய அவஸரத்தில், "அறம் தலை நிருத்தி வேதம ருள் சுரந்தறைந்த நீதி, திறந்தெறிநதுலகம் பூணச் செந் நெறி செலுத்தி தீயோர், இறந்துகநூறித் தக்கோரிடர் துடைத்தேக வீண்டு, பிறந்தவன்றன் பொற்பாத மேந்துவார் பிறப்பறுப்பார்"
(கமபர்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगेयुगे ॥

என்ற மொழிப் பெரும் மொழிக்கு, அனேகமாக மொழிபெயர்ச்சாயைபெற்று விளங்காநின்ற, அநுமான் திருவாக்கைக்கண்ணுற்ற கடிய மனத்தரும் அறத்தை அசைவர நிலைநிறுத்தல் ஆவச்யகமென நிர்ணயிக்காமலிரார். அறமே அறஞ்செயல்களைச்செய்ய சீர்மை பொருந்தித் துலங்குகின்றதென்பதற்குத் திருஷ்டாந்தமாகக் கர்ணன் போரில் (மாபாரதத்திலுள்ள) காட்டிய கதையேபோதுமானதெனலாம். அச்சரிதையையுஞ் சிறிதிங்கு காட்டுவாம். கர்ணன் போர்க்களத்தில்க் களைத்து நின்றபோது அவனிபற்றிய அறமே, சங்கல்பசித்தமான ஒருவருடன் நின்று அமர்புரிந்ததை யறிந்த பார்த்தசாரதியான கண்ணன் கர்ணனை இத்தருணம் வெல்லுதல் எளிதன்றென்று மனத்துள் மதித்து உருவம்மாற்றி கர்ண

னருகிற்சென்று தர்மத்தைத்தான் திரவ்யமாகப்பெற்று நானுக்கு ஜயத்தையளித்துக் கர்ணனுக்கும் உத்தமகதியை கொடுத்தார் என்பது பாரத சரித்திரத்தைக் கண்ணுற்ற அறிஞர்கட்கு வெள்ளிடைமலை போன்றதாகும். இச்சரித்திரத்தால் தார்மிகனை ஒரு வழியிலும் மீறல் முடியாதென்றும், அவ்வறத்தை ஈசுவரார்ப்பணஞ் செய்தவன்பிறப்பிறப்பில்லாப் பரகதியை யெய்வான் என்றும் வெளியாகின்றது. தர்மத்திலும் உற்றதுணை புவியிற் பிறந்தோர்க்கு வேறில்லையென்றே சாஸ்திரங்களின் ஸித்தாந்தமாகும். அப்படியே இந்திரஜித்தோடு லக்ஷ்மணன் போர் நிகழ்த்திய காலத்தில் மேகநாதனை ஜயித்தல் எளிதில் கூடவில்லையென்று ஆத்திரங்கொண்டு பிரதிக்ஞை செய்துகொண்டு எதிரியைவென்றுரென்று இச்சம்பவத்தை யறியாதார் சிலரே யாவர்

धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि ।
पौरुषे चाप्रतिद्वन्द्वश्शरैनं जहि रावणिम् ॥

(ராமர் தர்மாத்மாவும், சத்தியமுள்ளவரும் வல்லமையில் நிகரற்றவருமாக இருப்பாராகில் ஏ அம்பே மேகநாதனை வெல்லுவாயாக) என்ற பிரதிக்ஞாவாக்கியத்தில் தர்மத்தை ஸ்வரூபமாக உடையவனென்று முதலாகச் சொன்னதால் எக்குணங்களினும் தர்மமே தலைமையுற்றதென்றும் விரைவில் சத்ருஜயம் நிகழ்ந்தமையால் தர்மத்தின் தலைமையை நிலை நாட்டக் கடவுளே கண்ணோக்கினர் என்ற பேரெண்ணத்தை மக்கள் மனதில் உறுதிப்படுத்துவதோடு ஜயத்திற்குக் காரணம் தர்மமென்றும், தர்மத்தைத் தாங்குபவன் திருநாமத்தைக் கூறினும் கூறுபவன் ஜயமின்றி வெற்றிப் பெறுவான் என்றும் தெளிவாக வெளியாகின்றது. இந்த மட்டிலும் தர்மத்தின் பெருமையைக் காட்டியதுபோதும் விரிக்கிற் பெருகும் என்று அஞ்சி விடுகின்றோம்

இவ்விதம் சிறத்துக் கூறப்பெற்ற தர்மத்தின் உருவம் எத்தகையது. அது எவ்வகையது. என்ற சர்ச்சைகளும் நிகழ்வதோடு அதன் அனுஷ்டான முறையும் அது நிலைபெருமிடங்களும் எவை

யென்ற வினாக்களும் உண்டாகின்றனவென்று யாமே ஆக்ஷேபித்து முறையே அவைகளையும் மொழிகின்றோம். தர்மத்திற்கு ஒரு உருவம் என்பது கிடையாதது. அது ஒரு பதார்த்தம்போல் கண்ணுக்குப் புலப்படாதது. ஸ்பர்சிக்கப்படாதது. முகரப்படாதது. ருசிக்கப்படாதது, ஆனால் காதுகளால் தர்மம் சுகிருதம், என்ற அமுதமொழிகளால் கேழ்க்கப்படும் இதனால்பிரத்யக்ஷத்தில் காணமுடியாதது என்றும் பலத்தால் அனுமானிக்கப்படும் என்றும் சப்தமேதான் அதற்குப்பிரமாணமென்றும் சொல்லுதல் பொய்யாகாது. சப்தம் பிரமாணமென்றால் அபௌருஷேய சப்தமென்றவேதமும், வேதமறிந்தவர்களின் திருவாக்கும் அநுஷ்டானத்திற்குப் பிரமாணம் அவர்களின் அனுஷ்டானம் பெரியோர்கள் எதை நன்றென்று சொல்லுகின்றனரோ அதுவே தருமம். நன்றன்றென உறைக்கப்பெற்றவை அதருமமென்றறியவேண்டியது

वेदोऽखिलो धर्ममूलं स्मृतिशीले च तद्विदाम् । என்றும்

यत्वार्याः क्रियमाणं प्रशंसन्ति सधर्मो यद्गर्हन्ते सोऽधर्म इति ।

(வேதமுழுதும், அதையறிந்தவர்களின் ஸ்மிருதி, ஆசாரங்களும் தர்மத்திற்குமூலம், அனுஷ்டக்கப்படும்எக்கார்யத்தைப் பெரியோர் புகழ்கின்றனரோ அது தர்மம் எதை இகழ்கின்றனரோ அது அதர்மம்.) என்றும் கீழ் சொன்னவைக்கு ஆதாரமாகக் காத்துக்கொண்டிருக்கின்றன அறிஞர்கட்கு இம்மட்டிலுமே அதிகமாகும். இந்த தர்மம் ஸாமான்ய தர்மமென்றும் விசேஷதர்மம் என்றும் இருவகைப் படும். ஸாமானிய தர்மம் புவியில் தோன்றிய மக்களாம் யாவர்க்கும் பொதுவாய் உள்ளது. விசேஷதர்மம் என்பது அந்தந்த வர்ணங்கள் (பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள்) அந்தந்த ஆசிரமங்கள் (பிரம்மசர்யககார்ஹஸ்த்திய வானப்பிரஸ்த ஸந்யாஸங்கள்) இவைகட்கு பிரத்யேகமானது. இவைகளின் கிரமங்களைக் காட்டுவதற்கே ஈசுவராம் சாவதாரபூதர்களானமகரிஷிகளாலியற்றப் பட்ட சாஸ்திரமே பதினான்கு வித்தைகளாகும்

அவையாவன:—

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसान्यायविस्तरः ॥
पुराणं धर्मशास्त्रञ्च विद्याह्येताश्चतुर्दश ॥

6 அங்கங்கள் (சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம்) நான்குவேதங்கள் (ரிக் யஜுஸ் ஸாம அதர்வ) மீமாம்ஸை நியாயம புராணம் தர்மசாஸ்திரம் இவை பதினான்கு வித்யைகளாகும்) இவை இவ்வுலகில் பிரஸித்தி பெற்றிருக்கிறதென்பது பாலருமறிந்த விஷயமாகும். வர்ணாசிரமதர்மங்களை எனையோருமறியப் பேரெண்ணங்கொண்ட பல மேதாவிகளும் எளிய தண்டமிழில் பிரமாணவசன வியாசங்களுடன் பத்திரிகைகளிலும் புஸ்தகங்களிலும் விரித்துரைத்திருக்கின்றனர். ஆதல்பற்றி வர்ணாசிரம தர்மவிஷயமாக இங்கு இப்போது பிரஸ்தாபமவசியமானதல்லவென்று கருதி ஸாமாந்ய தர்மங்களைப் பற்றி விசாரித்தலே உசிதமென்று அது விஷயத்தில் சிரத்தை காட்டுவோம். வேதத்தை உயிர்ப்பித்தல் சாஸ்திரங்களை சீர்படச் செயல். தமிழ்மொழியைச் செழிக்கச் செய்தல். மாந்தர்களின் வறுமைப்பிணி யொழித்தல். இரக்கம தண்ணீர்ப்பந்தல் அன்னசத்திரங்கள் ஸ்தாபித்தல் ஆலய வழிபாடு பழமையான ஆலயங்களைப் புதிப்பித்தல் நித்ய பூஜை நடப்பித்தல். மஹோத்ஸவம் நிகழ்தல்பிராமணர்களைப்பணிதல் பெரியார்களை ஆதரித்து வரவேற்றுஉபசரித்தல்ஏழை மக்கட்குவீடுமுதலிய வசதிகளை ஏற்படுத்தல் இத்துணைநன்றிகளுக்கும் ஹேதுவான வேதசாஸ்திர புராணங்களை நம்பிஆஸ்திகமதத்தை யுணர்தல்இவைபோன்றவைகளே யாவற்குமுறிய தர்மங்களாகும். இத்தருமங்களைப் பிறர் பழியாது பாதுகாத்தலேஅதன் அனுட்டானமுறை, இவ்வண்ணம்பலபகுதிகளைப்பெற்றநல்லறமேகலிமகாராஜனின்ஆக்ஞையைமருதாளியாது சிரத்தால்பெற்று கலிராஜ ஸம்மானம் பெற்றுச் சீர்த்திருத்தக்காரரென வெளிவந்த சிலரைக்கண்டு எங்கும் நிருவி நிற்கஸஹியாது ஓரிடத்துள் நுழைந்து சரண்புகுந்து அங்குள்ளோரால் பரிபாலிக்

கப்பட்டுதுன்பம் மறந்து களிப்பெய்தி வளர்ந்து சரணம் கொடுத்த வர்களைகார்த்துக்கொண்டு விளங்கிவருகின்றது. இதனல் மற்றவிட ங்களில் தர்மமே இல்லையென்று அர்த்தமாகாது.

எங்கும் ஆஸ்திகர்கள் கலியையும் எதிர்த்து வஸித்துக்கொண் டுதானிருக்கின்றனர். தர்மமும் ஆங்காங்கு ஆதரிக்கவேபடுகிறது. என்றுலும் நிச்சங்கமாய் வசிக்கவில்லை யென்றே சொல்லுகிறேன். அறம் சரண்புகுந்து விளங்குமிடம் எதென்று கூறுதல் அநாவசிய மாகாது. அஃதைக் கூறுமிடத்து தற்காலப் புது மேதாவிகளுட் சிலருக்குச் சினம் விளைந்தாலும் உண்மையை மறைக்க வியலாதார் என்செய்வார். தர்மம் குடிபுகுந்து வாழும் இடமோ, நகரம், நகர, மென்றல், இடுகுறிப்பெயரால் ஒரு வகுப்பார் குடியேரி இருக்கும் இடமெனப் பொருள் சொல்லவேறு பலர் ஜீவனத்திற்கு உதவும் ஊரையே நகரமென்று செப்புவதாலும், காரணப்பெயராகவும் பொருந்தும் நகரமென்றுகூறப்பட்ட ஸ்தலங்களில் வாழ்பவர்க்குத் தனவைசியர். நகரவைசியர். தர்மவைசியர், எனப்பல பெயர்கள் வழங்குதல் தொன்றுதொட்டு நிலாவிவருகின்றது.கீழ் சொல்லிய தர்மங்கள் யாவும் இந்நகரவைசிய ஸமூகத்தாரால் சீர்குலையாது நடத்தப்பெறுகின்றன வென்றல் கண்கூடாகக் கண்டவர்கட்கு மிகையாகாது. இவ்வைசியர்களில் ஒவ்வொருவரும் கடற்கரை கடந்து தேடிய நிரவியத்தில் சில பகுதியைத் தர்மத்திற்கென்றே தனிப்படுத்தி வளர்த்து அறத்தை வள்முற வாளுகின்றனர். இவர் கள் கல்வியிலும், செல்வத்திலும் ஊக்கத்திலும், ராஜீய முறைகளி லும், தர்மத்திலும்தேர்ச்சிப்பெற்றவர்கள் சிலர்பட்டதாரிகளாகவு மிருக்கின்றனர். வேதசாஸ்திர பாடசாலைகள் அன்னசத்திரங்கள் தமிழ்கலாசாலைகள், ஆலய தர்மபரிபாலனங்கள், தண்ணீர்பந்தல், வேதபாராயணங்கள் முதலிய இத்தகைய தர்மங்கள் அந்நகரங் களில் நிலைபெற்று வருகின்றன. பலதேசத்திய பிராமணர்கள். பரமாநந்தத்துடன் தங்கள் தர்மங்கட்குக் குன்றுதலன்றிக்காலங் கழிக்கின்றனர். மற்ற வகுப்பினரும், தொழிலாளிகளும், தோஷ மின்றி திறமைக்குத்தக்க பரிசுகள் பெற்றுய்கின்றனர். தைவங் களின் ஆலயங்கள் புதிதுபுதிதாகத் தோன்றுகின்றன. கலிபுரு

ஷனுக்கு கேலியைக்கொடுக்கும் இத்தர்மவான்கள் வசிக்கும்இடங்களான நகரங்களுக்கு பகவத் பாதாம்ச பூதர்களான பரமாசார்யர்களும் அப்போதப்போது விஜஞ்செய்து, நகரவைசியர்களால் அன்போடாதரிக்கப்பட்டு பூர்ணாநுக்ரகமும் செய்துவந்தார்கள். இவ்விஷயத்தை விரித்துக்கூற, முடியாதாயினும் முக்கியமான அம்சங்களை மட்டிலும் கூறமுன்வந்து கூறுமிச்சமயம் நினைவுக்கு வந்துலவுமோர்விஷயத்தையும் எடுத்துரைத்தல்கடமையாகின்றது. அதாவது ஸமீபத்தில் (அதாவது தை-மீ' த்தில்) கானாடுகாத்தான் (வெள்ளாற்றுக்குத் தெற்கு, வைகைக்கு வடக்கு, உள்ள நகரங்களில் ஒன்றான மகாநகரம்) என்ற நகரத்திற்கு ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யமகாஸ்வாமிகள் விஜயஞ்செய்த தினங்களுள் ஒருதினம் மகாஸன்னிதானம்செய்த அமுதவர்ஷம்போன்ற உபந்யாஸமத்தியில் (சிற்சில காரணம்பற்றிச் சோழராஜனிடம் சினங்கொண்டு, காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து இந்நாட்டில் குடியேறிய தனவைசியர்கள், தன் கடமையில்லாமையால் போரின்றி தர்மத்தால் சோழராஜர்கள் வென்றனர். என்று சாற்றியதே என் சொல்லுக்கு மிக்க சாக்ஷியமாகும். தவிர சேதுமுதல் பனிமலைவரையிலுள்ள ஸ்தலங்களில் நகரவைசியர்களின் தர்மமில்லாத ஸ்தலத்தைக்காண்டல்கேட்டல் அரிது. இனிவிரிக்கப்பெருமாகையால் மறுமுறை விரிக்கக்கருதி இத்துடன் இவ்விஷயத்தைச் சுருக்கி இந்நகரவாசிகளான தனவைசியர்கட்கு வரவர ஆயுளாரோக்யம் ஐசுவர்யம் ஆஸ்திகபுத்தி இவைகளையும் இஷ்டசித்திகளையும் அருளுமாறு ஸ்ரீசந்திரமௌளீசுவரரைப் பிரார்த்தித்துக்கொண்டு எழுதுகோலை வேறுவிஷயத்தில் நாட்டுகிறேன்.

K. R. விசுவநாத சாஸ்திரிகள்.

கானாடுகாத்தான்.

---

இவ்வெல்லைக்குள் க்ஷேத்திராங்கிக்கு 32 அம்சம் ஆக்னேயத்திலுள்ளவர் || வலம்புரி விநாயகர்.

வலம்புரிவிநாயகரின் ஓரம்சம் கிழக்கிலுள்ளவர்
சுப்பிரமணியக் கடவுள்.

## துர்க்காலயம் 4.

முற்கூறிய சுப்பிரமணியராலயத்துக்கு 2 அம்சம் தெற்கிலுள்ளது. பாஞ்சாலிகை கோயில்.

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு 15 அம்சம் வாயுதிக்கிலுள்ளது
க்ஷேத்திராங்கி கோயில்.

க்ஷேத்திராங்கி ஆலயத்துக்கு 10 அம்சம் தெற்கிலுள்ளது.
கம்புதாரணி கோயில்

கம்புதாரணி ஆலயத்துக்கு 48 அம்சம் அக்னிதிக்கிலுள்ளது,
‡ பாணும்பிகை கோயில்

## சிவாலயம் 3.

பாணும்பிகை ஆலயத்துக்கு 4 அம்சம் தெற்கிலுள்ளது.
புண்ணியகோடீசர். ஆலயம் (1)

புண்ணியகோடீசர் ஆலயத்துக்கு 15 அம்சம் வாயுதிக்கிலுள்ளது
மணிகண்டீசர் ஆலயம் (2)

மணிகண்டீசர் ஆலயத்துக்கு 10 அம்சம் வடக்கிலுள்ளது.
சத்தியநாதீசர் ஆலயம். (3)

### வரலாறு.

பிரமன் வலம்புரி விநாயகரைத் தான் செய்யத்தொடங்கிய அசுவமேதத்திற்கு வரும் இடையூறுகளைப் போக்குவதற்கும், 'சுப்பிரமணியக் கடவுளை'ச் சாதகாசாரியாக விருத்தற்கும் 'பாஞ்சாலிகையை'ச் சுவாஸினி (சுமங்கலி) பூஜைக்கும், அசுவமேதத்துக்குக் கொண்டுவந்த குதிரையைக் களவினுற் கொண்டுபோன

---

|| வலம்புரி விநாயகரும் சுப்பிரமணியக்கடவுளும் வரதராஜர் கோயிலிலுள்ளவர்கள்,

‡ இவ்வம்மை கிராமரக்ஷணி எனவும், வெலாத்தாள் எனவும், வழங்கப்படுகின்றனள்.

அயாசுரனைப் பலிகொண்ட 'க்ஷேத்திராங்கியைப்' பலி கொள்வதற்கும் விஷ்ணுமூர்த்தியைப் பூஜித்து அவரிடத்தில் சங்கினைப் பெற்ற 'கம்புதாரணியையும்' 'பாணும்பிகையையும்' யாகத்திற்குக் காவலாக விருத்தற்கும், 'புண்ணியகோடீசரை' யாகாரம்பத்தில் பூஜிப்பதற்கும், 'மணிகண்டீசரையும்' இந்திரன் தனக்கு வந்த யோனியன் என்னும் பெயர்போய் ஸஹஸ்ராக்ஷன் என்னும் பெயர் வரப்பூஜித்த சத்தியநாதீசரையும், அவுத்காதா (உபதிஷ்டா)க்களாக விருந்து மந்திரங்களை எடுத்து ஓசைபட உச்சரிப்பதற்கும் அந்தந்த ஸ்தானங்களில் அமைத்துக் கொண்டனன்.

## விஷ்ணுவாலயம் 8.

சத்தியநாதீசருக்கு 12 அம்சம் தெற்கு திக்கிலுள்ளது.

யதோக்தகாரிசந்நிதி (1)

யதோக்தகாரிசந்நிதிக்கு5 அம்சம் அக்கினி திக்கிலுள்ளது.

குகாநரசிம்மர் சந்நிதி (2)

குகாநரஸிம்மர் ஸந்நிதிக்கு 5 அம்சம் நிருதி திக்கிலுள்ளது.

அஷ்டபுஜர்சந்நிதி (3)

அஷ்டபுஜர் சந்நிதிக்கு 5 அம்சம் வாயு தெற்கிலுள்ளது

வித்யாகுண்டர் சந்நிதி (4)

வித்தியாகுண்டர் சந்நிதிக்கு 5 அம்சம் தெற்கிலுள்ளது.

* நரசிம்மர் சந்நிதி (5)

நரசிம்மர் சந்நிதிக்கு 7 அம்சம் வடக்குதிக்கிலுள்ளது

தீபப்பிரகர்சர் ஸந்நிதி (6)

தீபப்பிரகாச சந்நிதிக்கு 21 அம்சம் வடக்கு திக்கிலுள்ளது

வைகுண்டர் சந்நிதி (7)

வைகுண்டர் சந்நிதிக்கு 5 அம்சம் வடக்கிலுள்ளது

பவளவண்ணர் சந்நிதி. (8)

### வரலாறு.

'யதோக்தகாரிப்பெருமாள்' பிரமன்செய்யத்தொடங்கியயாகத்தை அழிக்கவெண்ணி, 'வேகவதி' என்னும் நதிரூபமாய் வந்த

---

* இது நரசிங்கப் பெருமாள் என வழங்கும்

சரஸ்வதியின் கர்வத்தையடக்கும் பொருட்டு, நிர்வாணியாய்ச் சயனித்திருந்தவர். 'குகாநரசிம்மப் பெருமாள்' இந்திரன் சாபத்தால் † கஜேந்திரனான காலத்தில் வரதராஜர் சந்நிதியில் வந்து தனது ஹ்ருதய குகையில் பூஜிக்கப்பட்டவர். 'அஷ்டபுஜப்பெருமாள்' மாயை என்னுங்காளியோடு போர் செய்து அவளைக் கீழே தள்ளிச் சிரசின்மேல் வீற்றிருப்பவர். 'வித்தியாகுண்டப் பெருமாள்' முன் சொன்ன சரஸ்வதியின் மானத்தைப் போக்க வந்த காலத்தில் அவளால் பூஜிக்கப்பட்டவர். 'நரசிம்மப் பெருமாள்' பூர்வத்தில் கபாலி என்பவனைக் கொன்று அவனால் விடப்பட்ட அஸ்திரங்களை விழுங்கிஜீர்ணமாக்கிக் கொண்டவர். 'தீபப்ரகாசப் பெருமாள்' பூர்வத்தில் மாயாலன் என்பவனைத்தீபம்போல் தமது கரத்திற்றாங்கினவர். 'வைகுண்டப் பெருமாள்' துண்டீர ராஜனுக்கு வைகுண்ட தரிசனங்காட்டினவர். 'பவளவண்ணப் பெருமாள்' பூர்வத்தில் அசுரர்களுடைய ரக்தத்தைப் பானம் செய்தவர்.

## † முத்திரை 5.

முன்சொன்ன பவளவண்ணர் சந்நிதிக்கு 46 அம்சம் அக்னி திக்கில் வரதராஜப்பெருமாளிடம் (1)

வரதராஜப்பெருமாளுக்குப் பின்பக்கத்தில் 1 அம்சம்கிழக்கு திக்கில் இரண்டு பல்லிகளிடம் (2)

பல்லிகளுக்கு 2 அம்சம் கிழக்குதிக்கில் இருபத்து நான்கு படிகள் (3)

அப்படிகளுக்கு 1 அம்சம் மேற்குதிக்கில் இலக்ஷ்மிதேவி வீற்றிருக்கும் அர்த்தாசனம் (4)

இந்த அர்த்தாசனத்துக்குச் சமீபம் 1 அம்சம் ஈசானதிக்கில் புண்ணியகோடி விமானம் (5)

### வரலாறு.

'வரதராஜப்பெருமாளுக்கு'ப் பூதேவியார் அளவிறந்த புஷ்பங்களைக் கொடுத்து அவரை விவாகஞ்செய்துகொண்டனர். இர

† யானையான காலத்தில்

ண்டு பல்லிகள்' பூர்வஜன்மத்தில் பிராம்மணராகவிருந்து சாபத்தால் பல்லிகளாயின 'இருபத்துநான்குபடிகள்' வரதராஜர் சந்நிதிக்குப் போகும்வழியாக முன் தேவசில்பியால் நிர்மிக்கப்பட்டவை; 'அர்த்தாசனம்' லக்ஷ்மிதேவியானவள் தன்னை வரதராஜமூர்த்தி விவாகஞ் செய்துகொள்ள வீற்றிருக்க இடம், 'புண்ணியகோடி விமானம்' வரதராஜமூர்த்தி எழுந்தருளியிருப்பதற்கு இந்திரனால் அனுப்பப்பட்டது.

## தீர்த்தம் 4.

புண்ணியகோடி விமானத்துக்கு 2 அம்சம் ஈசானதிக்கில்
அனந்தசரசு (1)
அனந்தசரசுக்கு 2 அம்சம் வாயுதிக்கில் பக்தோதயசரசு (2)
பக்தோதயசரசுக்கு 3 அம்சம் வடக்கு திக்கில்
இந்திர தீர்த்தம் (3)
இந்திர தீர்த்தத்துக்கு 25 அம்சம் அக்னிதிக்கில்
பாஞ்சாலிகை தீர்த்தம் (4)

### வரலாறு.

'அனந்தசிரசில்' முன் ஆதிசேஷன் ஸ்நானம்செய்து பூமியைத் தாங்கும் வல்லபத்தைப் பெற்றன்ன் 'பக்தோதயசரசு' விஷ்ணுபக்தர்கள் ஸ்நானம் செய்தால் அவர்களுக்கு ஸர்வ பாபங்களையும் போக்குவது; 'இந்திரதீர்த்தத்தில்' இந்திரன் ஸ்நானம்செய்து ஆயிரம கண் பெற்றனன்; 'பாஞ்சாலிகை தீர்த்தம்' காளிகாதேவியின் பொருட்டு விஷ்ணுமூர்த்தியினது சுதரிசனம் என்னும் சக்கிரத்தினல் உண்டாக்கப்பட்டது.

ஆக விஷ்ணுக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் உள்ளவை விநாயகாலயம் 1, ஸ்கந்தாலயம் 1. துர்க்காலயம் 4. சிவாலயம் 3, விஷ்ணுவாலயம் 8. முத்திரை 5, தீர்த்தம் 4.

இந்த விஷ்ணுசாலையில் இவையெல்லாம் தேவியினுடைய ஆக்ஞையினல் எப்பொழுதும் காணப்பட்டுவருகின்றன. இதில் வசிப்போர்க்கு வைகுண்டவாசபலமுண்டாமாதலால் இது பூலோகவைகுண்டம் எனப் பெயர்பெற்றது.

† அடையாளம்.